ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2067/5 - 2018 අප්‍රේල් මස 17 වැනි අඟහරුවාදා - 2018.04.17
*2067/5 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 3/7/03/01.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2005/A/119.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் நுவரெலிய மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகப் பிரிவின் ஒயப்பலாத்த கோரளை 514 D தென்னெஹென்வல கிராம சேவகர் பிரிவில் தென்னெஹென்வல கிராமத்தில் உள்ள (ஆரம்ப வரைபட இலக்கம் 3160) இடப்பரப்பை நில அளவையாளர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட மூலவரைபட அளவீடுகளின் படி 1.9930 ஹெக்டயாருக்குறிய காணிப் பிரிவின் எல்லைகள் பின்வரும் துண்டு இலக்கம் 01, 02, 03 இல் காட்டப்பட்டுள்ளது:

01. **துண்டுஇல. 01**
காணியின் பெயர் : முல்ஹல்கெலெ தோட்டம்; உரிமை கோருவோர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விபரம்: வீட்டுத் தோட்டம், 15-25 வருட வயதிலான கலப்புப் பயிர் செய்கை உண்டு; விஸ்தீரணம்: 1.1210 ஹெக்டயார்.

02. **துண்டுஇல. 02**
காணியின் பெயர்:-; உரிமை கோருவோர்: தெரியவில்லை; விபரம்: கால்வாய்; விஸ்தீரணம்: 0.0283 ஹெக்டயார்.

03. **துண்டுஇல. 03**
காணியின் பெயர் : முல்ஹல்கெலெ தோட்டம்; உரிமை கோருவோர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விபரம்: வீட்டுத் தோட்டம், 15-25 வருட வயதிலான கலப்புப் பயிர் செய்கை, நீர்த்தாங்கி, தற்காலிக கட்டிடம், நிரந்தரக் கட்டிடம் உண்டு; விஸ்தீரணம்: 0.8437 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு வலப்பனை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோறிக்கைளின் விபரங்களையும் நஷ்ட ஈடுத் தொகைகலையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகம்,
2018, ஏப்பிறல் 10.

05 - 03

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: 4/1/5/27.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/9/2015/டப்ளியூஎஸ் /164.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழக்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில், குருநாகலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 837, குருநாகலை நகர மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில், (குருநாகலை மாநகர சபை எல்லைக்குள் இல. 1) மடமேகம கிராமத்தில் அமைந்த, நில அளவை மா அதிபரால் அளந்து 2018.02.19 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட கு/2379 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் காணித்துண்டின் இலக்கம் 1 மற்றும் 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "தன் கஹ கும்புர மற்றும் கலகாவ கும்புர" என்னும் காணியில் சுமார் 0.0708 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழக்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகள் இரண்டு:

**01. காணித்துண்டு இலக்கம் 1 - காணியின் பெயர்: தன்கஹமுல கும்புர மற்றும் கலகாவ கும்புர; விஸ்தீரணம்: 0.0514 ஹெக்டயார்.**

வடக்கு - இல. கு 60 ஐக் கொண்ட ஆரம்ப வரைபடத்தின் 3 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் ஒடை
கிழக்கு - ஒடை
தெற்கு - இவ்வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 2, எம். கித்சிறி உரிமைகோரும் கெவத்த மற்றும் சேற்று நிலம்
மேற்கு - எம். கித்சிறி உரிமைகோரும் கெவத்த மற்றும் சேற்று நிலம்

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் - திரு. எம். கித்சறி, இலக்கம் 172/ 2, கொழும்பு ரோட், குருநாகலை

**02. காணித்துண்டு இலக்கம் 2 - காணியின் பெயர்: தன்கஹமுல கும்புர மற்றும் கலகாவ கும்புர; விஸ்தீரணம்: 0.0194 ஹெக்டயார்.**

வடக்கு - இவ்வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1
கிழக்கு - ஒடை
தெற்கு - ஆயுர்வேத வைத்தியசாலை ரோட்
மேற்கு - டீ. ஜே. பீ. சில்வா உரிமைகோரும் கெவத்த மற்றும் சேற்று நிலம்

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் - திரு. டீ. ஜே. பீ. சில்வா, இலக்கம் 315, "சிறிசர" கொழும்பு ரோட், குருநாகலை

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி மு. ப 10.30 மணிக்கு குருநாகலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளையும் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகலை.

குருநாகலை பிரதேச செயலாளர் அலுவலகம்,
2018, ஏப்பிறல் 11.

05 - 04

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு : ARA/LAND/ACQV1/D3/45.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2016/VE/449.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி என்னால் இலக்கம் 2062/35 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேஷ வார்த்தமானியில் இலக்கம் 03-1325 இன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில் நில அளவை அத்தியட்சகர் மூலம் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை அகற்றி, அதற்கு பதிலாக வேறொரு திகதியை குறிப்பிட்டு அதனை உள்ளடக்குவதன் மூலம் அவ்வறிவித்தலை கீழக் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தப்படவேண்டும் என இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

| அகற்றவேண்டிய திகதி | அகற்றிய திகதிக்குப்பதிலாக உள்ளடக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|
| 2017.03.30 | 2018.02.12 |

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரநாயக.

அரநாயக பிரதேச செயலாளர் அலுவலகம்,
2018, ஏப்பிறல் 10.

05 - 05

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.